**எல்பிட்டிய பிரதேச சபை – 2022**

-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எல்பிட்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, எல்பிட்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் வருமானத்திற்கு எடுப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த 02 வருடங்களை கடந்துள்ள ரூபா 2,610,512 தொகை பெறுமதியான வைப்பு மீதிகள் மீளாய்வாண்டின் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய ரூபா 362,264 இற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் நிலையான வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி 2022 ஆண்டின் போது அப்புறப்படுத்தப்பட்ட மற்றும் ஏல விற்பனை செய்யப்பட்ட ரூபா 1,171,499 பெறுமதியான பண்டங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 18 விடயங்களின் கிரயத்தை சொத்துக்களில் இருந்து அகற்றியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய கடன் பட்டோர் மீதி ரூபா 100,948 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்காத நிர்மாண வேலைகளுக்காக ரூபா 2,000,000 தொகை செலுத்த வேண்டிய நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 04 நிர்மாண வேலைகளின் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதி ரூபா 115,664 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டிற்காக முத்திரைக் கட்டண சிட்டையிடல் ரூபா 4,857,766 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சமமின்மைகளை இணக்கம் செய்து எதிர் காலத்திரல் சரி செய்யப்படும் என. | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் சிட்டையிடல் ரூபா 949,834 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 19,112,111 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுதொகை ரூபா 1,218,068 தொகைக்கான 02 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | 2022 மே 09 திகதி இனங் காணப்படாத கும்பல் ஒன்றினால் சபையின் வாகனத்தை தீ வைத்து அழித்திருந்த போதிலும் நி.பி. 104 இன் படி விசாரணை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | நி.பி. 104 இன் படி விசாரணை மேற்கொள்வதற்கு சபையின் அங்கீகாரம் கிடைக்காமையால் அவ் விசாரணை மேற்கொள்ள தேவையில்லை என செயலாளருக்கு வாய் மூலம் அறிவிக்கப்பட்டதெனவும் மற்றும் நட்டத்தொகை காப்புறுதி உள்ளடக்கத்தின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2013 ஏப்ரல் 22 திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் பகுதி IV(அ) | 29 மந்திரிமாருக்கான எரிபொருள் கொடுப்பனவு செய்யும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான தகவல்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படாத போதிலும் எரிபொருள் கொடுப்பனவாக ரூபா 870,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமல் எரிபொருள் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என. | வர்த்தமானிக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 38,869,036 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 32,120,727 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,946,500 | 5,105,210 | 4,166,434 | 18,793,338 | 4,824,000 | 4,713,531 | 3,008,396 | 17,854,562 |
| வாடகை | 3,109,200 | 4,798,850 | 5,628,046 | 4,025,222 | 3,709,200 | 2,698,250 | 1,924,905 | 4,854,418 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 716,500 | 1,209,894 | 1,236,244 | 13,550 | 2,251,000 | 992,167 | 970,217 | 39,900 |
| ஏனைய வரு மானங்கள் | 7,193,000 | 12,902,697 | 12,994,657 | 848,876 | 6,998,000 | 6,032,962 | 6,032,962 | 940,836 |
| மொத்தம் | 16,965,200 | 24,016,651 | 24,025,381 | 23,680,986 | 17,782,200 | 14,436,910 | 11,936,480 | 23,689,716 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 17,854,562 தொகையாக காணப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 18,793,338 தொகையாக இருந்தது. | 2023.03.21 அளவில் ரூபா 1,302,768 தொகையொன்று அறவிடப்பட்டிருந்தது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் 7499 வீதவரி அலகுகளில் இருந்து மீளாய்வாண்டின் போது பணம் ஏதும் அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன், அந்த அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரி நிலுவை மீதி ரூபா 16,981,098 தொகையாக இருந்தது. அந்த மீதியில் ரூபா 100,000 தொகையை மிகைத்த 05 அலகுகளில் இருந்து ரூபா 1,116,218 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | பொதுமக்கள் வீதவரி செலுத்துவதின் போக்கு குறைந்திருந்தது எனவும், பிரதேச சபை அதிகார சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும். | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு மற்றும் அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | சபையின் வீதவரி பெறுமதி மதிப்பீடு 12 வருடங்களாக மேற்கொண்டிருக்கவில்லை. | உள்ளுராட்சித் திணைக்களத்தினால் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக இணக்கம் தெரிவித்துள்ளது என. | பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொண்டு வருமானம் அறவீடு செய்வதற்காக செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை வருமானம் ரூபா 4,484,418 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 4,025,222 தொகையாக இருந்தது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் கடிதங்கள் அனுப்பப்பட்டது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 4,300,080 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 199,750 தொகை பெற வேண்டியிருந்தது. | தென் மாகாண பிரதான செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள என்டாஹெலென நீர் வீழ்ச்சி அமைந்துள்ள நிலப் பகுதி சபைக்கு அறுதியான நன்கொடையொன்றாக கிடைத்திருந்த போதிலும் அதனை அபிவிருத்தி செய்து வருமானம் உழைப்பதற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. | சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என. | சபைக்கு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கஹதுவ லெவ்வத்ததுவ பாதை மண் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்காக 02 கட்டங்களின் கீழ் ரூபா 899,573 தொகை கொடுப்பனவு செய்யும் போது பொதுவான மண்ணிற்காக ஒரு கனமீற்றருக்கு ரூபா 1,413 தொகைக்காக அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதங்களை பயன்படுத்தாமையால் ரூபா 231,903 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் மாகாண வீதி பொறியியல் அலுவலகத்திலிருந்து கிடைக்கும் விரிவான வேலை விபரங்கள் மற்றும் நிச்சயிக்கப்பட்ட கூறுவிலைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகையாக செலுத்தப்பட்ட தொகையை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 07 நிர்மாண வேலைக்குரிய பாதையின் உயர்ந்த இடங்களிலுள்ள மண்ணை வெட்டி எடுத்தல் (Reducing high side soil) மனித உழைப்பின் மூலம் மண் வெட்டுவதற்கான விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அதற்காக இஸ்கவேட்டர் இயந்திரம் மற்றும் JCB இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் 310.18 கனமீற்றர்களுக்காக ரூபா 363,726 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | 05 நிர்மாண வேலைகளுக்குரிய பாதையின் பக்க வடிகால்களில் மண் வெட்டுவதற்காக மனித உழைப்பின் மூலம் மண் வெட்டுவதற்கான விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக இஸ்கவேட்டர் இயந்திரம் மற்றும் JCB இயந்திரம் பயன்படுத்தி வடிகால்களில் மண் வெட்டப்பட்டிருந்தமையால் அதற்காக ரூபா 137,456 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | ஒப்பந்தக்காரருடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி 05 நிர்மாண வேலைகள் தொடர்பாக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அறிமுகப்படுத்தியிருந்த 2022 செப்தம்பர் விலை விகிதங்கள் பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த விலை விகிதங்கள் பயன்படுத்தப்படாமையால் ரூபா 235,023 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் ஒவ்வொரு காலாண்டுக்காகவும் தயாரிக்கப்படுகின்ற கூறுவிலைகளின் கீழ் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் அதன்படி கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது என. | மிகை கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள 03 பேரிடம் மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 05 பேரிடம் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 174,468 இற்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் மற்றும் பதில் அளிக்கப்படாதவைகளுக்காக சபை தீர்மானத்தின் மூலம் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |